1973 நவம்பர் 30]

ஒப்புதல் அளித்துள்ள வேலைகளுக்குச் செலவு செய்யலாம் என்று அரசு வரையறுத்துள்ளது. இந்த ஒதுக்கீட்டில் செய்து முடிக்கப்படாத வேலைகள் "எஞ்சியுள்ள வேலைகள்" என்று கருதப் பட்டு பின்வரும் ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப் படும். இந்த இரண்டு கட்டங்களிலும் சேர்க்கப்படாதிருந்த 1,500-ம் அதற்கு மேற்பட்டுள்ள மக்கட்தொகையைக் கொண்ட ஊரகப் பகுதிகள், இந்தச் சிறப்புத் திட்டத்தின் பின்வரும் கட்டங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் முடிக்கப்படும் சாலை வேலைகள் பராமரிப்புக்கு நெடுஞ்சாலை கிராமப்பணித் துறையினரால் எடுத்துக் கொள்ளப்படும். வினா 522-ல் குறிப்பிட்டுள்ள களுகர் கடை சாலை மதுரை-மண்டபம் சாலையிலிருந்து பிரிந்து களுகர் கடை செல்கிறது. அதன் நீளம் 1.40 கி.மீ. அது சரளைகல் பரத்தி தார் சாலையாகப் போடப்படும்.

திருப்புவனம் ஒன்றியத்திலுள்ள சாலைகள்.

*** 521. வினா—**திரு. த. சோணையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பிரமனூர் தார்ச் சாலையாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பிரமனூர் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றி, சீர் செய்ய அரசு 18—5—1973 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை எண் 1014-ல் ஆணை யிட்டுள்ளது.

*** 522 வினா—**திரு. த. சோணையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையில் இருந்து களுகர் கடை செல்லும் சாலையை தார்ச் சாலையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?